**செய்தி வெளியீடு எண்:664** **நாள்: 08.10.2017**

**<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (8.10.2017) சேலம் மாவட்டம், எடப்பாடியில் நடைபெற்ற பல்வேறு அரசு துறைகளுக்கு அடிக்கல் நாட்டும் விழா மற்றும் அரசு நலத் திட்டங்கள் வழங்கி விழாப் பேருரை ஆற்றினார்கள்</u>**

நஞ்சுண்டீஸ்வரர் ஆலயத்தினுடைய நிலப்பரப்பில் சுமார் 2.5 கோடியிலே புதிதாக திருமண மண்டபம் கட்டுகின்ற அடிக்கல் நாட்டு விழாவை தலைமை தாங்கி நடத்திக் கொண்டிருக்கின்ற மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களே, இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு, சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு சேவூர் ராமச்சந்திரன் அவர்களே, நாடாளுமன்ற உறுப்பினர் பன்னீர்செல்வம் அவர்களே, முன்னாள் அமைச்சர், மேட்டூர் பகுதி சட்டப்பேரவை உறுப்பினர் திரு.செம்மலை அவர்களே, சேலம் மேற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜி.வெங்கடாசலம் அவர்களே, சங்ககிரி சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ராஜா அவர்களே, ஓமலூர் சட்டப்பேரவை உறுப்பினர் திரு வெற்றிவேல் அவர்களே, வீரபாண்டி சட்டப்பேரவை உறுப்பினர் திருமதி மனோன்மணி அவர்களே, தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கித் தலைவர், சேலம் மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் திரு இளங்கோ அவர்களே, ஆத்தூர் சட்டப்பேரவை உறுப்பினர் திரு சின்னத்தம்பி அவர்களே, முன்னாள் சேர்மேன் திரு மாதேஷ் அவர்களே, திரு கதிரேசன் அவர்களே, திரு.மணி அவர்களே,எடப்பாடி நகரமன்றத் தலைவர் திரு மாரியப்பன் அவர்களே, முன்னாள் எடப்பாடி நகரமன்ற துணைத்தலைவர் திரு.ராமன் அவர்களே, மற்றும் மேடையிலே வீற்றிருக்கின்ற அரசு உயரதிகாரிகளே, வருகை தந்திருக்கின்ற கழகத்தின் பல்வேறு பொறுப்புகளில் இருக்கின்ற நிர்வாகிகளே, பெரியோர்களே, தாய்மார்களே, கழக உடன்பிறப்புகளே,ஊடக மற்றும் பத்திரிகை நண்பர்களே,

அத்தனை பேருக்கும் நன்றியைத் தெரிவித்து, இன்றைக்கு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற காலத்திலேயே இங்கே இருக்கின்ற பொதுமக்கள், கழக நிர்வாகிகள் எல்லாம், நஞ்சுண்டீஸ்வரர் திருக்கோயிலினுடைய ஆலயத்திற்கு சொந்தமான இடத்தில் திருமண மண்டபம் கட்டிக் கொடுத்தால், இப்பகுதி மக்களின் இங்கே திருமண நிகழ்ச்சி

நடக்கின்றபொழுது, இந்த மண்டபம் மிகுந்த பயனளிக்கும் என்று கோரிக்கை வைத்தார்கள். புரட்சித்தலைவி அம்மாவிடத்திலே நான் இதை சொன்னவுடன், 2015–2016 ஆம் ஆண்டே இதற்கு நிதி ஒதுக்கித் தந்தார்கள். ஆனால், இந்த நிதி ஒதுக்கீடு போதாது, பெரிய மண்டபாக கட்டவேண்டும் என்று கோரிக்கை வைத்து, இது பரிசீலனையில் இருந்து கொண்டிருந்தது. இப்பொழுது இந்த மண்டபத்திற்காக, தமிழ்நாடு அரசு வருவாய்த் துறை சார்பாக 2.53 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. இங்கே அறநிலையத் துறையை சேர்ந்த அதிகாரிகள் மேலும் கூடுதலாக நிதி தேவை, சுற்றுச்சுவர் கட்டவேண்டும், மேலே அறைகள் கட்டவேண்டும், கூடுதலாக நிதி ஒதுக்கீடு தரவேண்டும், மேலும் 50 லட்சம் வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். அறநிலையத் துறை அமைச்சர் அவர்களை கலந்து பேசி, 50 லட்சம் ரூபாய் கூடுதலாக ஒதுக்கப்பட்டு, 3 கோடி ரூபாயில் பிரம்மாண்டமாக திருமண மண்டபம் இந்த இடத்திலே கட்டப்படும். இந்த மண்டபம் கிட்டத்தட்ட ஓராண்டில் கட்டி முடிக்கப்படும், இந்தப் பகுதி மக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்த ஆலயத்தை புதுப்பிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். அந்தக் கோரிக்கையையும் அம்மாவிடத்தில் சொன்னவுடன், அம்மா மனமுவந்து இதற்கு தேவையான நிதியை ஒதுக்கீடு செய்து இன்றைக்கு புதுப்பிக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே பொது மக்கள் வேண்டுகோளுக்கிணங்க, நஞ்சுண்டீஸ்வரர் ஆலயம் அருகில், இருக்கின்ற முருகன் கோயிலுக்கு, எடப்பாயில், முருக பக்தர் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே, கழகத்தின் சார்பாக அனைவரும் சேர்ந்து அங்கே முருகப் பெருமாள் எழுந்தருளியுள்ள மண்டபத்திற்கு அழகான ஒரு கட்டடத்தை கட்டுவதற்கான பணிகள் எல்லாம் துவங்கப்பட்டு, விரைவிலே அந்த முருகப் பெருமானுடைய ஆலயம் கட்டி உங்களுடைய அன்போடு, ஆதரவோடு திறக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்குப் பக்கத்தில் இருக்கின்ற ஆஞ்சநேயர் கோயிலையும் புதுப்பிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். அதுவும் புதுப்பிக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொளகிறேன். எடப்பாடி நகரமே ஒரு மாற்றத்தை கண்டிருக்கின்றது. 2011க்கு முன்பு, எடப்பாடி

நகரம் எப்படி இருந்தது, 2011க்குப் பிறகு, புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, எப்படி எடப்பாடி நகரம் வளர்ச்சி அடைந்திருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். நான் 2011 தேர்தலில், வீடுவீடாக எடப்பாடி மக்களை சந்தித்து வாக்கு சேகரிக்கும் பொழுது அவர்கள் வைத்த கோரிக்கைகள் குடிநீர் பிரச்சினை, வெள்ளாண்டிவலசு போகும்பொழுது, அங்கு இருக்கின்ற ஒரு தாய்மார் ஒரு பாட்டில் எடுத்து வந்து தண்ணீர் பிடித்து சுமாராகத்தான் தண்ணீர் கிடைத்துக் கொண்டிருக்கிறது. நீங்கள் வந்தவுடனேயே அம்மா அவர்களிடம் எடுத்துச் சொல்லி எங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டுமென்று இந்த எடப்பாடி நகர மக்கள் அத்தனை பேரும் கழக நிர்வாகிகள் மூலமாக கோரிக்கை வைத்தார்கள். அந்தக் கோரிக்கையை அப்படியே அம்மாவிடத்தில் சொன்னவுடனே, 20 கோடி ரூபாய் கொடுத்து, எடப்பாடி நகர மக்களுக்கு தனியாக குழாய் மூலமாக சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் அளித்திருக்கிறோம். இதெல்லாம் எந்த ஆட்சியிலும் செய்ய முடியாத சாதனை, இன்றைக்கு அம்மாவினுடைய அரசு செய்து கொடுத்திருக்கின்றது. ஆகவே, இன்றைக்கு அம்மா நம்மிடத்திலே இல்லாவிட்டாலும், அம்மா செய்த சாதனை, இந்த மக்கள் மனதிலே என்றும் நிலைத்து நிற்கும். இந்த திட்டம் அம்மா கொண்டு வந்த திட்டம் என்று அத்தனை பேரும் சொல்லுகின்ற அளவிற்கு, இன்றைக்கு அற்புதமான அந்தக் குடிநீர் திட்டம் நிறைவேற்றப்பட்டு, எடப்பாடி நகர மக்களுக்கு தங்குதடையில்லாமல் காவிரி தண்ணீரை அம்மா வழங்கிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். என்னவெல்லாம் நீங்கள் கேட்டீர்களோ, அத்தனையையும் அம்மா அவர்கள் செய்து கொடுத்திருக்கிறார்கள். நல்ல சாலை வசதி கேட்டீர்கள், செய்து கொடுத்தார்கள். நெடுஞ்சாலைத் துறை மூலமாக கோட்ட அலுவலகம் கேட்டீர்கள், அதையும் செய்து கொடுத்தார்கள். டிவிஷன் ஆபீஸ் மேட்டூரில் இருந்தது, அதையும் கேட்டீர்கள், அம்மா அதையும் கொடுத்தார்கள். வேளாண் அலுவலகம் கேட்டீர்கள், அதுவும் வந்திருக்கிறது. மத்திய கூட்டுறவு வங்கியின் கிளை திறக்க இருக்கிறார்கள். அம்மா பெட்ரோல் பங்க் இங்கே திறக்க இருக்கிறது. இங்கு பாலம் வேண்டுமென்று கேட்டீர்கள், உடனடியாக அம்மா ஒப்புதல் அளித்து பாலம் கட்டி, திறக்கப்பட்டிருக்கிறது. எடப்பாடி பின்தங்கிய பகுதியாக இருக்கிறது, எடப்பாடி நகருக்கு அழகு சேர்க்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தீர்கள்.

அம்மாவிடத்தில் சொன்னவுடனே அதற்கு நிதி ஒதுக்கீடு செய்து அழகான நீரூற்றை எடப்பாடி நகரத்தின் நுழைவுவாயிலேயே கொடுத்தார்கள். இதுமட்டுமல்ல, அருகில் பார்க் இருக்கிறது, இதை அழகுபடுத்த வேண்டுமென்று கோரிக்கை வைத்தீர்கள், அதற்கும் நிதிஒதுக்கீடு செய்தவர் முதலமைச்சர் அம்மா அவர்கள். எடப்பாடி நகரத்திலுள்ள மருத்துவமனையை கூடுதல் வசதிகளுடன், கூடுதல் படுக்கை வசதிகள் வேண்டுமென்று கோரிக்கை வைத்தவுடன், 4 கோடி ரூபாய் கொடுத்து கட்டடம் கட்டி, அம்மாவினுடைய திருக்கரங்களால் திறக்கப்பட்டு இன்றைக்கு மக்கள் பயன்பாட்டிற்கு வந்திருக்கிறது. வெள்ளாண்டிவலசு மற்றும் கண்டம்பட்டிக்கு இடையே பாலம் வேண்டுமென்று கேட்டீர்கள், அந்த பாலத்தையும் அம்மா கட்டிக் கொடுத்தார்கள். புதிதாக கண்டம்பட்டியிலிருந்து டவுனிற்கு செல்ல ஒரு பாலம் கேட்டீர்கள். அதற்கும் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது, அப்பணி விரைந்து துவக்கப்படும். இந்தப் பகுதிகளுக்கு Drainage வசதி கேட்டீர்கள், அதையும் அம்மா செய்து கொடுத்தார்கள். ரேஷன் கடையை கேட்டீர்கள், அதையும் அம்மா கொடுத்தார்கள். கூடுதல் பள்ளிக் கட்டடம் வேண்டுமென்று கேட்டார்கள், அதையும் கொடுத்தார்கள். கல்லூரி வேண்டுமென்று பல்லாண்டு காலமாக கோரிக்கை வைத்தீர்கள். அம்மா அவர்கள் இருக்கின்ற காலத்திலேயே 2011லேயே அருமையான கல்லூரி கொடுத்து, அற்புதமான கட்டடத்தை கொடுத்து, இன்றைக்கு 1100 பேர் படிக்கிறார்கள். இப்பொழுது எடப்பாடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதியில் இருக்கின்ற மாணவ மாணவிகள், சங்ககிரி, மேட்டூர், ஓமலூர் சட்டமன்றத் தொகுதியல் இருக்கின்ற மாணவ மாணவிகள் எல்லாம் உயர்கல்வி படிக்கவேண்டுமென்பதற்காக இன்றைக்கு வனவாசி பகுதியில் பாலிடெக்னிக் கல்லூரி கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. அதேபோல எட்டிகுட்டைமேடு பகுதியில் பி.எட். கல்லூரி அம்மாவினுடைய ஆட்சியிலே இன்றைக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது, அதுவும் 2018 ஆம் வருடம் திறக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். எட்டிகுட்டைமேடு பகுதியில் சிட்கோ தொழிற்பேட்டை வேண்டுமென்று கோரிக்கை வைத்தீர்கள். அந்தப் பணி துவங்கப்பட்டுள்ளது. அங்கு தொழிற்பேட்டை அமைத்து, அங்கிருக்கின்ற மக்கள் எல்லாம் தொழிற்பேட்டை அமைக்கும் சூழ்நிலையை உருவாக்கித் தந்திருக்கிறோம்.

ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டுமென்று கேட்டீர்கள், அதையும் கொடுத்திருக்கிறோம். வனவாசியில் கட்டடம் கட்டிக்கொடுத்திருக்கிறோம். புதிதாக கால்நடை மருத்துவம் பக்கநாடில் கொடுத்திருக்கிறோம். இப்படி தேவைப்பட்ட அனைத்தையும் செய்து கொடுத்த அரசு அம்மாவினுடைய அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுமட்டுமல்ல, 14000 ரூபாய் போட்டு விலையில்லா மடிக்கணினி இலவசமாக கொடுத்து, விஞ்ஞான கல்வி, அறிவுபூர்வமான கல்வி ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு கிடைத்து, மக்களின் வாழ்க்கைத்தரம் உயர அம்மா கொண்டு வந்த திட்டம், தமிழ்நாட்டில் தான் கொடுத்திருக்கிறோம், இந்தியாவில் எந்த மாநிலத்திலும் கிடையாது. உலக அளவில் எங்கேயுமே கிடையாது. கிராமப்புறத்தில் இருக்கின்ற கோயில்கள் ஆதிதிராவிட கோயில்கள் மற்றும் பிற்படுத்தப்பட்ட கோயில்கள் எல்லாம் சிறப்பாக இயங்கவேண்டும் என்பதற்காக அம்மா அவர்கள் ரூ.25000 கொடுத்திருக்கிறார்கள், பிறகு 50000 ஆக்கினார்கள், இப்போது அம்மாவினுடைய அரசு 1 லட்சம் ரூபாய் வழங்குகிறது. 1000 ஆதிதிராவிடர் கோயில், 1000 பிற்படுத்தப்பட்ட கோயில்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு பல்வேறு ஆலயங்களில் பூஜை செய்வதற்காக பூஜை பொருட்கள் கொடுப்பதற்கு நானே நேரடியாக அவர்களை அழைத்து கொடுத்து, தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற ஆலயங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளன. இத்தனையும் அம்மாவினுடைய ஆட்சியிலே செய்யப்பட்ட சாதனை என்று சுட்டிக்காட்டி, மேலும் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்ற மனு கொடுத்திருக்கிறீர்கள், அதெல்லாம் நிறைவேற்றப்படும். நம்முடைய மாவட்டத்திற்கு மிகப்பெரிய பெருமை சேர்க்கப்பட்டிருக்கிறது. எடப்பாடி மக்களுக்கு பெரிய சிறப்பு கிடைத்திருக்கின்றது. தமிழகத்திலே 234 சட்டமன்றத் தொகுதிகள் இருந்தாலும், எடப்பாடி சட்டமன்ற தொகுதியிலே நான் இருக்கின்றேன், எனக்கு புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியாலும், உங்களுடைய ஆதரவோடும், இன்றைக்கு தமிழகத்தினுடைய முதலமைச்சராக பொறுப்பேற்று இந்த மேடையில் பேசுகின்ற பாக்கியத்தை இறைவன் அருளியிருக்கின்றார், அந்த நஞ்சுண்டீஸ்வரர் அருளால், இன்றைக்கு ஏழை, எளிய மக்கள் திருமணம் செய்வதற்காக, திருமண மண்டபம் அடிக்கல் நாட்டுவிழா நிகழ்ச்சியிலே பங்கு

பெற்றதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன் என்று தெரிவித்து, அதோடு பேருந்து நிலையம், 17 புதிய பேருந்துகளை இயக்குகின்றோம். எடப்பாடி சட்டமன்றத் தொகுதியில் எங்கெல்லாம் பேருந்து வேண்டுமென்று கேட்டீர்களோ, 2011லிருந்து 2017 வரைக்கும் 17 புதிய பேருந்துகளை பல்வேறு இடத்திற்கு அம்மாவினுடைய அரசு இயக்கிக் கொண்டிருக்கிறது. நீங்கள் கொடுத்த கோரிக்கைகளை அம்மாவிடத்திலே சொல்லி, அவ்வளவும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அம்மா அவர்கள் நம்முடைய தொகுதிக்கு மேலும் மேலும் வளங்களை சேர்ப்பார் என்று தெரிவித்து, தமிழ்நாடு முழுவதும் உள்ள மக்களுக்கு தேவையான அத்தனை திட்டங்களும், இந்த மாவட்டத்திற்குள்ள அத்தனை திட்டங்களும், எங்களால் முடிந்த அளவிற்கு தருவோம் என்று இந்த நேரத்திலே தெரிவித்து, இந்த சிறப்பான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த அத்தனை நல்ல உள்ளங்களுக்கும், மாவட்ட ஆட்சித்தலைவருக்கும், அறநிலையத்துறை அதிகாரிகளுக்கும், அழைப்பை ஏற்று இந்த நிகழ்ச்சிக்கு வந்த மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் மாவட்டத்தை சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**